

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (25.12.2024) முகாம் அலுவலகத்தில், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா. மதிவேந்தன் தனது பிறந்தநாளையொட்டி குடும்பத்தினருடன் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (25.12.2024) முகாம் அலுவலகத்தில், கழக செய்தி தொடர்புச் செயலாளர் பேராசிரியர் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் கிறிஸ்துமஸ் திருநாளையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் மருத்துவர் பாபு உள்ளார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (25.12.2024) முகாம் அலுவலகத்தில், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் தலைவர் திண்டுக்கல் ஐ. லியோனி கிறிஸ்துமஸ் திருநாளையொட்டி குடும்பத்தினருடன் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

சித்தேரி மலைப்பாதையில் ஏற்பட்ட மண் சரிவு -

# 63 கிராம மக்கள் பாதிப்பு - துரித நடவடிக்கையால் மீண்டும் போக்குவரத்து துவங்கியது!

## தருமபுரி எம்.பி.ஆ.மணி நடவடிக்கை!

தர்மபுரி, டிச. 26 -

தர்மபுரி மேற்கு மாவட்டம் அரூரை அடுத்த சித்தேரி மலைப்பகுதியில் கடந்த 3 நாட்களுக்கு முன்பு பெய்த தீவிர மழை காரணமாக மண் சரிவு ஏற்பட்டு மலைக்கிராமத்திற்கான போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டிருந்தது. இதனால் சித்தேரி மலை பகுதிக்கு உட்பட்ட சூரிய கடை, சித்தேரி, மண்ணூர், அழகூர், தோல் தூக்கி உள்ளிட்ட 63 கிராமங்களைச் சேர்ந்த மக்கள் எந்த கனரக வாகனங்களை பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டிருந்தது.

இதனால் பொதுமக்கள் விவசாயிகள் என போக்குவரத்தை நம்பியுள்ள அனைத்து மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்புக்கு உள்ளாகியிருந்தது. பள்ளி மாணவர்கள் கர்ப்பிணி பெண்கள் முதிய வர்கள் என அனைவரும் இதனால் பெரும் பாதிப்புக்கு உள்ளான நிலையில்,

இது குறித்து தகவல் அறிந்த தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர்.ஆ.மணி தமிழ்நாடு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம் ஆர் கே பன்னீர்செல்வம் ஆலோசனையின்படி நெடுஞ்சாலை துறை மற்றும் மாவட்ட நிர்வா கத்தினை அணுகி மண்சரிவு ஏற்பட்ட பகுதிகளில் சீரமைக்கும் பணிகளை துரிதப் படுத்த நடவடிக்கை மேற்கொண்டார்.

இதனை தொடர்ந்து சீரமைக்கப் பட்ட பாதையில், மீண்டும் போக்குவரத்தினை தர்மபுரி நாடாளுமன்ற உறுப் பினர் வழக்கறிஞர். ஆ.மணி மற்றும் முன்னாள் அமைச்சர் கழக மேற்கு மாவட்ட செயலாளர் பி.பழனியப்பன் ஆகியோர் நேரில் சென்று துவக்கி வைத்தனர்.

மீண்டும் அப்பகுதியில் நிலச்சரிவு ஏற்படாமல் இருக்க நெடுஞ்சாலைத் துறை ஆய்வு செய்து, ரூபாய் 75 லட்சம் மதிப்பீட்டில் நிதி ஒதுக்கி சரிவு ஏற்பட்ட பகுதியில் திடமான சுவர் அமைத்து சாலை அமைக்க அறிவுறுத்தி உள்ளதால் இதற்கான நிதியை விரைந்து ஒதுக்கீடு செய்து இனி நிரந்தரமாக மக்கள் பாதுகாப்பாக செல்வதற்கான வழிவகை செய்ய உள்ளதாக தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர். ஆ.மணி தெரிவித்தார். நிகழ்வின் போது மாவட்ட துணை செயலாளர் பொறியாளர் சி.கிருஷ்ணகுமார், ஒன்றிய கழக செயலாளர்கள் முத்துக் குமார், பி.எஸ். சரவணன், சந்திரமோகன், நெடுஞ்சாலைதுறை நாகராஜ், வனத்துறையினர் உடனிருந்தனர்.

48 வது சென்னைப் புத்தகக் காட்சி

“கலைஞர் கருவூலம்” விற்பனைக் கூடத்தில் தலைமைக் கழக வெளியீடுகள்!

48வது சென்னைப் புத்தகக் காட்சி, நந்தனம், ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில் (நந்தனம் அரசினர் கலைக் கல்லூரி அருகில்) 2024 டிசம்பர் 27 முதல் 2025 ஜனவரி 12 வரை நடைபெறுகிறது.

புத்தகக் காட்சி அரங்கில், அரங்கு எண்: 392ல் அமைந்துள்ள “கலைஞர் கருவூலம்” விற்பனைக் கூடத்தில் திராவிட இயக்க நூல்கள் உள்ளிட்ட தலைமைக் கழக வெளியீடுகள் விற்பனைக்கு கிடைக்கும்.

தலைமைக் கழகம்,
தி.மு.க.

மதச்சார்பின்மையை பேணிக் காத்தவர்! கலைஞருடன் நட்புக் கொண்டவர்!

# முன்னாள் பிரதமர் வாஜ்பாய் 100வது பிறந்த நாளில் தமிழ்நாட்டிற்கு அவர் ஆற்றிய பங்களிப்பை நினைவு கூர்வோம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, டிச. 26-

மதச்சார்பின்மையை பேணிக் காத்தவர்களிடம் நட்பு கொண்டவர். தமிழ்நாட்டின் மேம்பாட்டிற்காக முன்னாள் பிரதமர் வாஜ்பாய் அவர்கள் ஆற்றிய பணியை அவரது 100வது பிறந்த நாளில் நினைவு கூர்வோம் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து முதல்வர் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-



**முன்னாள் பிரதமர் அடல் பிகாரி வாஜ்பாய் அவர்களின் நூறாவது பிறந்தநாளில் தமிழ்நாட்டின் உட்கட்டமைப்பு மேம்பாட்டுக்காக அவர் ஆற்றிய பங்களிப்பினையும், நமது தலைவர் கலைஞர் அவர்களுடன் அவர் கொண்டிருந்த நட்புறவினையும் நினைவுகூர்கிறோம்.**

**வலதுசாரிக் கருத்தியல் கொண்டவராக இருந்தாலும், பிரதமர் பொறுப்பில் இருந்தபோது நாட்டின் மதச்சார்பின்மைப் பண்பை அவர் பேணிக்காத்தார். அவரது வாழ்வும் பணியும் நிலைத்து நிற்கும்!**

இவ்வாறு முதல்வர் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (25.12.2024) முகாம் அலுவலகத்தில், கழக துணை அமைப்புச் செயலாளர் ஆஸ்டின் கிறிஸ்துமஸ் திருநாளையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (25.12.2024) முகாம் அலுவலகத்தில், மாநில சிறுபான்மை ஆணையத் தலைவர் அருட்தந்தை சொ.ஜோ அருண் கிறிஸ்துமஸ் திருநாளையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



சிங்கப்பூர் நாட்டில் அமைந்துள்ள Gardens by the Bay எனும் நகர்ப்புற பூங்காவை அரசுப் பள்ளி மாணவச் செல்வங்களுடன் இணைந்து பார்வையிட்ட பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி இயற்கையின் அவசியத்தை உணர்த்தும் இந்தப் பூங்கா 260 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. 1.5 மில்லியனுக்கும் அதிகமான தாவரங்களைக் கொண்டுள்ள இப்பூங்காவினை இதுவரை 100 மில்லியனுக்கும் அதிகமான பார்வையாளர்கள் பார்வையிட்டு உள்ளார்கள். இயற்கை ஆர்வலர்களும், அறிவியலாளர்களும் வியந்து பார்க்கும் Gardens by the Bay பூங்காவினை மாணவச் செல்வங்களுடன் இணைந்து பார்வையிட்டதில் மகிழ்ச்சி என அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பதிவிட்டுள்ளார்.